802

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M. 2913

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.		
[தபால் சிலவுள்பட]		
ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா		
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்		

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.	
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.	

பு-25 | கும்பகோணம் பிரமாதி-ஸ்ரீ மார்கழி-மீ 27உ 1940 ஸ்ரீ ஜனவரி-மீ 11உ | ல-2

ஹிந்துத்தலைவர் கொல்லப்பட்டார்

ஒருமூர்க்க பட்டாணியின் கொடுமை
லாகூரில் ஸம்பவம்

எல்லைப்புறத்தில் பிரபல வக்கீலாயும், மதிப்பு வாய்ந்த ஹிந்து ஸமூஹத்தலைவருமான ஸ்ரீமான் பாலிராம் என்றவர் லாகூரில் ஒரு ஜட்கா வண்டியில் போய்க்கொண்டிருக்கையில் மதவெறி பிடித்த ஒரு மூர்க்க பட்டாணியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் ஸமீபத்தில் கல்கத்தாவில் நடந்த ஹிந்து மஹா ஸபைக்கூட்டத்திற்குப்போய் வந்தார். மந்திரியாயுமிருந்தவர்.

குடும்ப சாஸ்திர அப்யாஸம் வேண்டும்:

முஸ்லீம் ஸ்திரீகள் கல்வி மஹாநாட்டில் தீர்மானம்.

கல்கத்தாவில் நடைபெற்ற முஸ்லீம் ஸ்திரீகளின் கல்வி மஹாநாட்டில், பெண்களுக்குக் குடும்ப சாஸ்திர அப்யாஸம் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாகச்செய்து வைக்கவேண்டுமென்றும், உடனே இந்த திட்டத்தை அநுஷ்டானத்தில் கொண்டுவர வேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டதாம்.

நவீன ஹிந்து ஸ்திரீகள் இம்மாதிரி; குடும்ப விஷயத்தைப் பற்றி கவலையெடுத்து தீர்மானம் செய்ததுண்டா?

சட்டசபை மெம்பர்களின் சம்பளம்.

காந்திஜீ பங்கு கேட்கிறார்

சட்டஸபைகளில் மெம்பர்களாயிருக்கும் காங்கிரஸ் காரர்களுக்கு இப்போது சட்டஸபைவேலை யொன்று மில்லாத காரணத்தால் அவர்களுடைய சம்பளத்தை முழுவதுமோ, அல்லது ஒரு பாகத்தையோ காங்கிரஸின் உதவிக்காகக் கொடுக்க வேண்டுமென்று காந்திஜீ உத்திரவு போட்டிருக்கிறார்.

பாலக்காட்டில்ஸ்திரீகள் மகாநாடு

ஆலயப்பிரவேச கண்டனம்

டிசம்பர்30உ பாலக்காடு ஸம்ஸ்கிருத பாடசாலையில் ஸ்திரீகள் மஹாநாடு நடைபெற்றது. மாஜிஸப்ஜட்ஜ் ஸ்ரீ ராமகிருஷ்ணய்யரவர்கள் மனைவியான ஸ்ரீமதி குஞ்சம்மாள் தலைமை வகித்தார். சாரதா சட்டம் ஆலயப்பிரவேச சட்டம் போன்றவைகளை கண்டித்துப் பேசினர். ஸ்ரீமதி ராஜம்மாள் முதலியரவர்கள் பேசியபின் அதையனுசரித்து தீர்மானங்கள் செய்யப்பட்டன.

புதிய சுயேச்சை பிரதிக்ஞை

"காங்கிரஸ் ஸமூஹ சீர்திருத்த ஸபையாகிவிட்டது"
தீவ்ரவாதிகளின் கண்டனம்

காங்கிரஸ்கார்யக்கமிட்டியானது சுயேச்சை பிரதிக்ஞையை புதிய மாதிரியில் திருத்தியதைப்பற்றி காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பெருத்தஆக்ஷேபம் தோன்றியிருக்கிறது. சர்க்காவும், கதரும், தீண்டாமை விலக்கும் தேசத்திற்கு ஸ்வராஜ்யமளிக்காதென்றும், ஆகையால் தீவ்ர காங்கிரஸ் வாதிகள் இந்தப்பிரதிக்ஞையை தள்ளிவிட வேணுமென்றும், நிர்மாண திட்டமென்கிற வியாஜத்தில், காங்கிரஸானது ஒரு ஸமூஹச் சீர்திருத்த ஸபையாக மாறி வருகிறதென்றும், ஸ்ரீ எம். என். ராய், ஜயப்பிரகாச நாராயணன் முதலானவர்கள் கண்டிக்கிறார்கள். வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியும் புதிய சுயேச்சை தின பிரதிஞ்ஞையை, முக்யமாக சர்க்கா, ஹரிஜனஸேவை முதலியவைகளைக் கண்டித்து தீர்மானித்தது.

கார்யக்கமிட்டியை மதிக்கவில்லை

ஸுபாஷ்போஸிடம் ரூ.10 ஆயிரம்

வங்க காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம்.

காங்கிரஸ் கார்யக் கமிட்டிக்கும், வங்காள காங்கிரஸ் கமிட்டிக்கும் தகராறு முற்றிவிட்டது. கார்யக்கமிட்டியின் தீர்மானமொன்றையும் வங்கக்கமிட்டி மதிக்கவில்லை. வங்காளக்கமிட்டியின் பணவரவு செலவு விஷயத்தைப்பற்றி கார்யக்கமிட்டி புகார் கூறியிருந்தது. ஆனால் வங்காளக்கமிட்டியானது தன்னிடமிருந்த 10ஆயிரம் ரூபாய்களையும் ஸுபாஷ் போஸிடம் கொடுத்துவிட்டது.

காங்கிரஸ் பிரதிநிதிகள் எலெக்ஷன் முதலானவைகளுக்காக கார்யக்கமிட்டி அட்-ஹாக்கமிட்டி நியமித்திருந்ததையும் மதிக்காமல், எலெக்ஷன்களையே தற்போது நடத்த வேண்டியதில்லையென்றுவங்காளக்கமிட்டி முடிவு செய்து விட்டது.

"தீ விபத்து தெய்வச்செயல்".

சென்னையில் காங்கிரஸ் பொருட்காட்சியில் தீ விபத்து உண்டானதைப்பற்றி கார்யதரிசி வெளியிட்டுள்ள அறிக்கையில் "இது தெய்வத் தன்மையால் நேர்ந்தது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியார் இதைப் பற்றிப் பேசுகையில், "இந்த தீ விபத்தானது, காங்கிரஸ்காரர் செய்தகொடுமை தாங்காமல் தெய்வத்தினால் உண்டாக்கப்பட்டது, என்று படிப்பு வாசனையில்லாத சில பாமரர்கள் சொல்லுவார்கள்" என்று ஸமாதானம் கூறினார்.

குழந்தைகளுக்கு கட்டி முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினால்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிகுதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம் :—ஆத்ரேய ஆயுர்வேத சாலா.
தென்னூர் ரோடு, திருச்சிறுப்பள்ளி.

விலை. ¼ பவுண்டு 1—6—0.
½ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

ஸந்தியாவந்தனம்

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் உபன்யாஸம்

முடிகொண்டானில் ஸ்ரீமான் ஏ. சாரங்கபாணி அய்யரின் கிரஹத்தில் நடைபெற்ற பிக்ஷையில், இரவில் ஸந்தியாவந்தனத்தைப் பற்றி ஸ்ரீஜகத்குரு அவர்கள் செய்த உபன்யாஸத்தின் ஸாரம் பின்வருமாறு:—

பல மதங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. பல மதங்கள் இருந்துவருகின்றன. இவைகள் எவ்வளவு காலத்திற்கு முன் ஏற்பட்டதென்பது நிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நம்முடைய மதத்தின் ஆதியைக் கணக்கிடமுடியவில்லை, ஆகவே, ஸந்தியாவந்தனம் என்னும் கர்மா செய்யப்பட்டுவருவதும் அனாதி என்பது ஸித்தமாகின்றது.

நமது முன்னோர்களாகிய மஹரிஷிகள் திரிகால ஞானிகள். அவர்கள் செய்த கிரந்தங்கள்தான் சாஸ்திரங்கள் எனப்படும். அவர்கள் சாஸ்திரங்களில் சொல்லியபடி, ஒவ்வொருவரும் நடந்துவந்தால்,உலகத்தின் ஸௌக்கியத்திற்குக்குறைவில்லை. உதாரணமாக, குளத்தில் ஸ்நானம் செய்யும் ஒவ்வொருவரும் நாலு கை மண்ணெடுத்து வெளியே கொண்டுவந்து போடவேண்டும்; அதிதிகளுக்குப் போஜனம் செய்விக்கவேண்டும்; என்று சாஸ்திரங்களில் கூறியபடி, நம் முன்னோர்கள் செய்து வந்தார்கள். அதனால், குளங்கள் பூர்ண ஆழத்துடனும், பூர்ண ஜலத்துடனும், ஸௌக்கியத்தைக் கொடுத்துவந்தன. வசதியில்லாத ஜனங்கள் போஜனத்தைக் கருதி கஷ்டப்படவில்லை. இப்பொழுதோ, குளங்களில் ஸ்நானம் செய்வதே குறைவு. மண் எடுக்கும் வழக்கமுமில்லை. குளங்கள் மேடிட்டு உபயோகமற்றதாகி வருகின்றன. மேடிட்டதைச் செப்பனிடவும் பணவசதியில்லை. அதிதிகளுக்குப் போஜனம் செய்விப்பது குறைவு. சாப்பாட்டிற்கு வசதியில்லாத ஜனங்களுக்குச் சாப்பாட்டுக் கஷ்டம் ஜாஸ்தியாகிவிட்டது. சில சமயங்களில் பஞ்சம் ஏற்படுகின்றது. இவை போன்று சாஸ்திரங்களில் இன்னும் எவ்வளவோ கூறப்பட்டிருக்கின்றன. அவைகளை அந்தந்த வர்ணத்தார் தவறாமல் அனுஷ்டித்து வந்தால், உலகத்தில் கஷ்டம் என்பதே இராது.

புண்ணியம் ஸம்பாதிப்பதற்காகஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டுமென்று நம் சாஸ்திரங்கள் கூறவில்லை. ஸந்தியாவந்தனத்தைச் செய்தே தீரவேண்டும். அது ஒரு கடமை. 'கா்ணாமல் கோணாமல் கண்டு கொடு, ஆடு காண், போகுது பார், போகுது பார்,' என்று ஓர் சித்தர் கூறியிருக்கின்றார். 'காலையில் சூர்யன் உதயமாகுவதற்கு முன்னும், மத்தியானத்தில் சூர்யன் உச்சியிலிருக்கும்பொழுதும், மாலையில் சூர்யன் மறைவதற்கு முன்னும், முறையே காலை சந்தியாவந்தனம், மாத்தியான்னிகம், மாலை சந்தியாவந்தனம், இதுகளுக்கான அர்க்கியங்களைக் கொடுக்கவேண்டும்; ஜன்மாவில் ஓர்தடவையேனும் கங்கையில் ஸ்நானம் செய்வதையும், சேதுவைத் தரிசிப்பதையும், செய்யவேண்டும்; இவ்விதம் செய்தால், பாபங்கள் போய்விடுகின்றன; என்பது அந்த வாக்கியத்தின் பொருள். [ஆடு - கங்கையில் நீராடு; காண் - சேதுவை தரிசி.]

பசுமாட்டிலிருந்து கிடைக்கும் க்ஷீரமானது எப்படி ஸாரமானதோ அவ்விதம் காயத்ரீ மந்திரம் மூன்று வேதங்களின் ஸாரமாகும்.

சூர்யமண்டலம் என்று ஒன்றிருப்பதை யாவரும் மறுக்கமுடியாது. சூர்யன் பிரத்தியக்ஷப் பிரமாணம். சூர்ய பகவானின் சக்தியினால்தான், உலகம் க்ஷேமமாக விருந்துவருகின்றது. சரியான காலங்களில் மழை; அதனால் நதி, குளம், ஏரி, முதலானவைகளில் ஜலம்; பயிர்கள், மரம், செடி, முதலியவைகள் செழிப்படைதல், இவை போன்ற அளவுகடந்த நன்மைகளை நாம் சூர்யனிடமிருந்து பெறுகின்றோம். அவருடைய சக்தி குறையாமலிருக்கவேண்டி, தினசரி செய்யப்படும் திரிகால ஸந்தியாவந்தனங்களிலும் அர்க்கியங்கள் கொடுக்கப்படுகின்றன. தனுர் வேதத்தில் அஸ்திரம், சஸ்திரம், என்ற பிரிவுகளுண்டு. யுத்தத்தில் எதிரியைக் கட்டவேண்டியிருக்கின்றது. அது சம்பந்தமான மந்திரத்தின் சக்தியை ஓர் தர்ப்பத்தில் ஆவாஹனம் செய்து, பிரயோகித்தால் எதிரியைக் கட்டிவிடுகின்றது. அதாவது, எந்தக் கார்யத்தைக் கருதி மந்திரத்தின் சக்தி வினியோகிக்கப்படுகின்றதோ, அந்தக் கார்யத்தை அது பூர்த்தி செய்கின்றது. அது மாதிரி. செய்யப்படுவது 'அஸ்திரம்' எனப்படும். நேருக்கு நேராக ஆயுதங்களைப் பிரயோகஞ் செய்வது 'சஸ்திரம்' எனப்படும். ஸந்தியாவந்தனத்தில் கொடுக்கப்படும் அர்க்கியங்கள், அஸ்திரம் போன்று சூர்ய மண்டலத்தை அடைந்து, உலக க்ஷேமார்த்தமாக சூர்ய பகவான் வினியோகிக்கும் சக்தியை, குறையாதவண்ணம் செய்துவருகின்றன. சந்தியாவந்தனம் செய்வதை, தமிழில், காலைக்கடன், மாலைக்கடன் என்று சொல்லுகின்றோம். ஒருவன் ஒருவனுக்குக் கடன் கொடுத்தால், அதைத் திருப்பிக்கொடுத்தாகவேண்டிய கடமையைச் செய்யாவிட்டால், அவன் திருடனுக்குச் சமானம். அத்துடன் பாபியாகின்றான். கடனைத் திரும்பக் கொடுத்தவன், செய்யவேண்டிய கடமையைச் செய்தவனாகின்றான். பாபம் சம்பவிக்காது. அதுபோல், நம்முடைய க்ஷேமார்த்தமாக சகல நன்மைகளையும் செய்துவருவதான ஓர் கடமையை, அதாவது, ஓர் கடனை, சூர்யபகவான் நமக்குக் கொடுத்துவருகின்றார். சந்தியாவந்தனம் தவறாமல் செய்வதின் கடமை மூலயம், சூர்யபகவானுக்கு அந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்தாகவேண்டும். சந்தியாவந்தனத்தைச் செய்யத் தவறியவன் கடன் கொடுக்காதவன் உள்ளாகும் பாபத்திற்கு உள்ளாகின்றான்.

நம்முடைய பெரியோர்கள் ஸந்தியாவந்தனத்தைக் காலத்திலும், தவறாமலும், விதிப்படிக்கும், செய்துவந்தார்கள். அதனால், சுபிக்ஷமாக விருந்து வந்தது. இப்பொழுதோ, ஆங்கிலப் படிப்பு படித்தவர்களில் அனேகர் ஸந்தியாவந்தனம் செய்வதாகத் தெரியவில்லை. பிராசீன வைதிக குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் தான், இன்றைக்கும், தம் முன்னோர்கள் செய்து வந்தபடிக்கு, சந்தியாவந்தனம் முதலான கர்மாக்களைச் செய்துவருதாகத் தெரிகிறது. ஸந்தியாவந்தனம் முதலான கர்மாக்கள் ஒழுங்காக நடைபெறாததின் காரணமாக, இப்பொழுது லோக க்ஷேமத்தில் குறைவுபட்டிருக்கின்றதான கார்யங்கள் தோன்றியிருக்கின்றன. தற்பொழுதைய நிலைமையில், அக்னி மறையும் தருவாயிலிருக்கின்றது. இனிமேலாவது, எல்லோரும் சந்தியாவந்தனத்தை ஒழுங்காகச் செய்ய ஆரம்பித்தால், மறைந்திருக்கும் அக்னி பூர்ண ஜோதியை அடையும் என்பதில் சந்தேகமில்லை. அதனால் உலகக்ஷேமங்கள் விருத்தியாகி, எல்லா ஜீவராசிகளும் சந்தோஷத்தை அடையும். சைக்கிள், வேகமாக வரும்பொழுது பெடல் பண்ணப்படுவது நின்றபோதிலும், கொஞ்சம் தானாகவே சென்று கொண்டேயிருக்கும். அதுபோல், சந்தியாவந்தனம் முதலான கர்மாக்கள் செய்யப் பட்டு வந்த குலத்தில் பிறந்தவர்களில் சிலர் தான் தாம் கர்மாக்களைச் செய்யாதபோதிலும், முன்னோர்கள் செய்த கர்ம பலத்தைக்கொண்டு இப்பொழுதும் கியாதிவான்களாக விளங்குகின்றார்கள்.

ஒருவன் அகாலத்தில் கிளம்பி, ரெயிலை விட்டுவிட்டால், போகவேண்டிய கார்யம் நஷ்டமாவதற்கு நிறம்பவும் வருத்தப்படுகின்றான். லோகக்ஷேமார்த்தமாகஅவசியம் செய்யப்பட வேண்டிய ஸந்தியாவந்தனக் கடமையை விடுவதில், அவ்வளவு தூரம் வருத்தம் உண்டாகாமலிருப்பது, எவ்வளவு பேதமை!

காயத்திரீ மந்திரத்தை, சொல்லப்பட்டிருக்கும் ஸங்கியைக் குறைவு படாமலும், ஸௌகர்யப்படுகிறவரையில் அதற்கு அதிகமாகவும், பிரதிதினமும் ஸரியான காலத்தில் மனது சலிக்காமல் ஜபிக்கவேண்டும். இந்த மந்திரம் மிகவும் உத்க்ருஷ்டமானது. எவனொருவன் சிரத்தையுடனும், பக்தியுடனும், இந்தமந்திரத்தை தியானபூர்வமாய் ஜபித்து வருகின்றானோ, அவன் பக்திசிரத்தையை அனுசரித்து அதே ஜன்மாவிலோ அல்லது தொடர்ந்து வரும் ஜன்மாக்களி லொன்றிலோ, அவனே அந்த ஸௌரமண்டல ரூபியான சூர்யனாகி (சூர்ய பகவானே ஸ்ரீ நாராயணன் அவரே ஸ்ரீ பரமேஸ்வரன், அவரே எல்லா மூர்த்தியின் தோற்றம்) மோக்ஷத்தை அடைகின்றான்.

ஸந்தியாவந்தனத்தின் மஹிமையைப்பற்றி ஓர் கதை இருக்கின்றது. சுமார் 500, 600 வருஷங்களுக்கு முன் நடந்ததாக ஊகிக்க முடிகின்றது. சென்னை கவர்ன்மெண்டைச் சேர்ந்த ஆர்க்கியலாஜிகல் டிபார்டுமெண்டார் பிரசுரித்திருக்கும் ரிகார்டில் இந்த கதைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

திருவனந்தபுரத்தை ஆண்ட ராஜாக்களில் ஒருவர், எள்ளினால் ஒரு கால புருஷன் உருவத்தைச் செய்து, அதனுள் ஏராள ஐஸ்வர்யத்தை வைத்து, அந்த உருவத்தைத்தானம் செய்யப்போவதாக விளம்பரம் செய்தார். அந்த உருவத்திற்குள்ளிருக்கும் பொருளைக் கருதி, அனேகர் தானம் வாங்கவந்தார்கள். அந்தக் காலபுருஷன் உருவம் கேட்ட கேள்விகளுக்குத்தக்க பதில் சொல்ல முடியாமல் தானம் வாங்க வந்தவர்களெல்லாம் மரணமுற்றார்கள். கன்னடியன் என்ற ஒரு பிராமணரிருந்தார். ஸந்தியாவந்தன கர்மாவில் வெகு சிரத்தையுள்ளவர். சாஸ்திரங்கள் முதலானவைகளில் அவருக்கு அப்பியாசங் கிடையாது. அந்த தானத்தை வாங்க அவர் வந்தார். காலபுருஷன் உருவம் மூன்று

(தொடர்ச்சி 3பக்கம் பார்க்க)

வே. வோ. சர்மாவின் பிரசுரங்கள்.

சங்கரோபதேசம்	2	0	0
பத்ம புராணம்	0	12	0
மார்கண்டேய புராணம்	0	6	0
வாமந புராணம்	0	6	0
வைகுண்ட ஏகாதசி	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்தபுராணம்	0	12	0
கூர்மபுராணம்	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம்;—ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

ஸ்ரீ ஸ்வாமிகள் பிரஸங்கம்

(2 பக்கம் தொடர்ச்சி)

விரல்களைக் காட்டியது. முடியாதென்றுர். பிறகு இரண்டு விரல்களைக்காட்டியது. அதற்கும் முடியாதென்றுர். கடைசியாக ஒரு விரலைக்காட்டியது. சரி என்றுர். தான் ஒன்றும் செய்யமுடியாததைக்கண்டு, காலபுருஷன் அந்த உருவத்தினின்றும் மறைந்தான். அந்த தானத்திலடங்கிய சகல ஐஸ்வர்யங்களையும் அந்தப் பிராமணர் வாங்கிக் கொண்டார். மூன்று விரல்கள் மூன்று வேளைகளில் செய்யப்படும் சந்தியாவந்தனத்தின் பலன்; இரண்டு விரல்கள், காலை, மாலை, இருவேளைகளின் சந்தியாவந்தனத்தின் பலன்; ஒரு விரல், ஒரு வேளை, அதாவது, மாத்தியானிகத்தின் பலன்; என்பது காலபுருஷன் உருவம் கேட்ட கேள்விகளின் அர்த்தம். சந்தியாவந்தனத்தின் ஒரு வேளையின் பலனைக் கொடுத்ததின் மூல்யமும், ஐஸ்வர்யத்தை தானம் வாங்கியதின் மூல்யமும் பிராமணருக்குப் பாபம் சம்பவித்து விட்டது. அந்தப் பாபத்தைப் போக்கிக் கொள்ளவேண்டிய வழியைத் தெரிந்து கொள்ள அகத்தியமுனிவர் தவம் செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் மலைச்சாரலுக்குச் சென்றுர். போகும் முன், தன்னிடமிருந்த தனத்தைப் பாதுகாக்கும்படி கோயில் பூஜை செய்து வந்த ஓர் குருக்களிடம் ஒப்படைத்தார். எங்கு சென்றுலும் அகத்தியமுனிவர் காணப்படவில்லை. முனிவரைத் காணுமையினுல் அவர் ஏக்கமுற்றிருக்கும் சமயத்தில், அகத்திய முனிவர் ஓர் கிழவடிவத்துடன், பிராமணர் முன் தோன்றினுர். "ஓர் பசுமாடு உமக்குத் தென்படும்; அந்த இடத்திலிருந்து ஓர் கால்வாய் வெட்ட ஆரம்பிக்க வேண்டும், பசுமாடு எவ்வளவு தூரம் சென்று நிற்கின்றதோ, அவ்வளவு தூரத்திற்குக் கால்வாய் வெட்டப்பட வேண்டும் நடுவில் பசுமாடு எந்த இடங்களில் சாணி போட்டு, மூத்திரம் பெய்கிறதோ, அந்தந்த இடங்களில் சாணி போட்ட இடத்தில் மடை அமைத்தும், மூத்திரம் பேயும் இடத்தில் வாய்க்கால் வெட்டியும் செய்ய வேண்டும், இவ்விதம் செய்தால் உமக்கு ஏற்பட்டிருக்கும் பாபம் போய் விடும்,'' என்று கிழவர் சொன்னுர். அவ்விதம் செய்யத் தீர்மானித்துக் கொண்டு, திரவியத்தை திரும்ப வாங்குவதற்காக குருக்களிடம் சென்றுர். குருக்களுக்கு பிராமணரின் தனத்திடம் மோகம் ஏற்பட்டு விட்டது. அந்தக் காலத்து பவுன் இனம் துவரம் பருப்பை ஒத்திருக்குமாதலால் குருக்கள் பிராமணரிடம் துவரம் பருப்புக்களை கொடுத்து, 'நீர் கொடுத்ததிரவியம் இது தான். எடுத்துக் கொள்ளும்'என்றுர். குருக்களின் வஞ்சகச் செய்கையை அறிந்தவராகி, பிராமணர் குருக்களை எவ்வளவு பிரார்த்தித்ததிலும் பயன்படாததைக் கண்டு, ராஜாவிடம் சென்று முறையிட்டுக் கொண்டார். குருக்களும் தருவிக்கப்பட்டார். குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை. தான் பூஜை செய்யும் லிங்கத்தைக் கட்டிக் கொண்டு குருக்கள் பிரமாணம் செய்தால் தர்ம ஒப்புக் கொள்வதாக பிராமணர் கேட்டு கொண்டார். அவ்விதம் செய்ய குருக்களும் சம்மதித்து விட்டார். குருக்கள் ஆபிசாரப் பிரயோகத்தில் தேர்ந்த வரானதால், லிங்கத்திலுள்ள ஸ்வாமியை பக்கத்தில் உள்ள ஒரு மரத்தில் ஆகர்ஷணம் செய்து விட்டார். ஸ்வாமி பிராமணர் சொப்பனத்தில் தோன்றி நடந்த வற்றைச் சொல்லி விட்டார். பிராமணர், மறுபடியும் ராஜாவிடம் சென்று, மரத்தைக் கட்டிக் கொண்டு பிராமணம் செய்யும் படி செய்ய வேணுமாய்க் கேட்டுக் கொண்டார் குருக்கள் மறுதளித்தும், பயன்படவில்லை. குருக்கள் மரத்தைக் கட்டிக் கொண்டு பிரமாணம் செய்தார். உடன் எரிந்து போய் விட்டார். எரிக்கட்டி ஸ்வாமி என்பது அந்த ஆலயமூர்த்தியின் பெயர். திருநெல்வேலி ஜில்லாவில் அந்த ஆலயம் இருக்கின்றது. பிறகு பிராமணர் தன் தனத்தை எடுத்துக் கொண்டு கிழவர் சொல்லியபடி பசுமாட்டைக் கண்டு கால்வாய் வெட்டினுர். கன்னடியன் கால்வாய் என்றுஅதன் பெயர். திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கின்றது. அந்தக் கால்வாயின் பிரதேசங்கள் நாளைக்கும் செழித்திருக்கின்றன. இத்தக் கதையினுல் சந்தியாவந்தனத்தின் பெருமை நன்கு விளங்கும்.

எனவே, சந்தியாவந்தனம் ஓர் கடமை. அது செய்வதினுல், உலகக்ஷேமம் ஏற்படுகின்றது. சிரத்தையுடன் செய்தால் மோக்ஷம் லபிக்கின்றது.

ஏ. கோபாலய்பர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை

&

ஸ்ரீ ஜனர்தந அச்சுக்கூடம், லிமிடெட்,

கும்பகோணம்

ஸ்ரீரங்கத்தில் ஸநாதநிகளின் கூட்டம்

ஸ்ரீரங்கம் தெற்கு சித்ரை வீதியில் சில தினங்களுக்கு முன் ஆஸ்திகர்களின் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான ஸ்திரீ புருஷர்கள் விஜயம் செய்திருந்தனர். பரோடா ஸம்ஸ்தான வித்வான் எம்பார் ஸ்ரீ உபய க்ருஷ்ணமாச்சாரிய ஸ்வாமி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். குடந்தையிலிருந்து அழைக்கப்பட்டிருந்த அக்நிஹோத்ரம் ஸ்ரீராமாநுஜதாதாசார் கூட்டத்தில் சுமார் $1\frac{1}{2}$ மணி ஸாவகாசம் பேசினுர். இப்பொழுது எக்காரணங்கொண்டோ அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் இதை உபயோகப்படுத்திக்கொண்டு சட்ட சபைகளுக்கு மத விஷயத்தில் உள்ள அதிகாரத்தை ஒழிக்கப் பாடுபட வேண்டுமென்றும் காங்கிரஸ் ஆக்ஷி முறையிலிருந்து ஜனநாயகம், கக்ஷியாக்ஷி இவை இந்தியாவுக்கு ஏற்றதன்று என்றுஏற்பட்டுவிட்டதென்றும்கூறினுர். ஆலயப்பிரவேசம் ஏன்கூடாதென்பதை ஸயன்ஸ், சாஸ்திரம், இவைகளை கொண்டு நிரூபித்து ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம்கூறினுர். அட்வகேட்ஸ்ரீகஸ்தூரிரங்காசார் கூறிய வந்தனோபசாரத்துடன் கூட்டம்முடிவடைந்தது. அக்ராஸனுதிபதி ஸநாதநிகள் அடிக்கடி ப்ரசாரம் செய்யவேண்டியதை வற்புறுத்தினுர். ந. நி.

சுப்பராயனின் மிரட்டல்

தெனிந்திய ராஜ்ய நாடக மேடையில் டாக்டர் சுப்பராயன் பல உருவங்களுடன் மாறி மாறித் தோன்றுவதை அறியாதாரில்லை, எந்த கக்ஷியோ ஜாதியோ, நிர்வாஹம் நடத்துகிறதோ அதனுடன் சேர்ந்து அவ்வப்போது ஆடவேண்டியதே அவரது நிலைமை. காங்கிரஸ் மெஜாரிடியாகி நிர்வாஹத்திற்கு வந்ததும் அவர் தமது பழைய ரூபத்தை மாற்றி காங்கிரஸ் ரூபம் தரிக்கவேண்டியதாயிற்று.

டாக்டர் சுப்பராயனுக்கு சில மாதமாக காங்கிரஸ் பக்தி தலைமட்டம் ஏறிவிட்டது. இப்போதாவது அது ஸ்திரமாக நிற்கவேண்டும். மதுரைபக்கங்களில் அவர் காங்கிரஸ் பிரசாரம் செய்கிருராம். வைஸ்ராய் ராஜி செய்வித்து மீண்டும் மந்திரி பதவி கிடைக்கலாமல்லவா? அதுவரையில் பார்த்து விட்டு பலிக்கா விட்டால் பிறகு வேறு கக்ஷி பார்க்கலாமென்ற உத்தேசம் போலும்? மதுரையில் மீனுக்ஷி கோவிலை நாசமாக்கியது 65 வது திருவிளையாடலென்று அவர் வர்ணித்தாராம்.

ஆலயப்பிரவேச சட்டத்தை கவர்னர் ரத்து செய்வாராகில், அதையே காரணமாகக்கொண்டு தேசத்தில் பெரிய அமளியான ராஜீயக்கிளர்ச்சி ஆரம்பிக்கப் படுமென்று அவர் பூச்சி காட்டினுராம். இந்த பயமுறுத்தும் காலம் மலையேறி விட்டதை இந்த மாஜி மந்திரி இன்னும் அறிந்துகொள்ளாதது விந்தையே. காங்கிரஸ் இதுவரை பயமுறுத்தியதும் அதனுல் ஏற்பட்ட பலாபலன்களையும் சிறு குழந்தைகூட அறியும். ஆங்கில அரசாங்கமோ, இந்தியப் பொது ஜனங்களோ இதை பொருள்படுத்தமாட்டார்கள். நிற்க. டாக்டர் சுப்பராயன் ராஜீயக்கிளர்ச்சியைப் பற்றி பேசுவது விந்தையல்லவா? இதுவரையில் காங்கிரஸ் நடத்திய சட்ட மறுப்பு முதலிய கிளர்ச்சிகளில் டாக்டர் சுப்பராயன் எவ்வளவு பங்கெடுத்துக்கொண்டாரோ? ஒரு நாளைக்காவது ஜயிலுக்கு போனுரா? ஒரு தடியடியாவது பட்டாரா? ஒன்றுமில்லையே! தியாகமே செய்யாத காங்கிரஸ்வீரனல்லவா? ஆலயப்பிரவேசத்தைஆதரித்து காங்கிரஸ் சட்ட மறுப்பு முதலிய கிளர்ச்சி ஆரம்பிப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது நமது ஸுப்பராயன் எங்கேபோய் பதுங்கியிருப்பாரென்று யார் அறிவார்? காங்கிரஸ்காரர்கள் ஜயிலுக்குப் போய்க் கொண்டிருக்கையில் நமது டாக்டர் வேறு கக்ஷி மந்திரி ஸபையைத் தேடமாட்டாரா? முன்னம் காங்கிரஸானது சட்டமறுப்பில் ஈடுபட்டு நிற்கையில் செங்கற்பட்டில் சுயமரியாதைக்கூட்டத்தில் தலைமை வகித்து காங்கிரஸை திட்டவில்லையா? சட்டசபையில், ஜஸ்டிஸ் கக்ஷியிலும், ஸ்வதந்திரக் கக்ஷியிலுமாக மாறி மாறி நின்று மந்திரிஸ்தானத்திற்கு அலையவில்லையா?

ஆதலால் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்தால் பெரிய கிளர்ச்சி ஆரம்பிப்போமென்று சுப்பராயன் பேசுவது விந்தையாயிருக்கிறது. உண்மையான காங்கிரஸ் வாதிகளே இதைக்கண்டு நகைப்பார்களல்லவா?

—— காங்கிரஸ் அபிமானி

Khadi is 'ammunition':

"We should resort to civil disobedience, only when we look upon it as our *Dharma*. Khadi is our ammunition in a non-violent struggle, and if we fire our guns without Khadi, Civil disobedience will fail."

Gandhiji at Congress Worker's Camp,

27—12—'39.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஞூ மார்கழி-மீ 27௳

ஹோட்டல் பிரவேசத்திற்கு அநுமதியில்லை.

ஆலயப்பிரவேசத்துடன் ஹோட்டல் பிரவேசமும் சேர்ந்துவிட்டது. சென்ற வருஷம் சென்னை சட்டஸபையில் ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவினால் கொண்டுவரப்பட்டிருந்த "தீண்டாதார் அஸௌகர்ய நிவிர்த்தி" மசோதாவானது சட்டமாகியிருப்பது நேயர்கள் அறிந்ததே. இந்தச் சட்டப்படி காப்பி ஹோட்டல் போன்ற பொதுஸ்தலங்களில் தீண்டாதார் பிரவேசிக்க உரிமையுண்டாவென்றும், ஹோட்டல்காரர்கள் அதை தடைசெய்யலாமாவென்றும், சிலருக்கு சந்தேகமேற்பட்டு அதை விளக்கும்படி சென்னை கவர்ன்மெண்டிற்கு எழுதினார்களாம். இதன்மீது கவர்ன்மெண்டார் ஒரு விளக்கத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஹோட்டல்களோ, கிளப்புகளோ, பொதுஸ்தலமாகாவென்றும், அவைகளுள் நுழையும்படி ஒருவரை அநுமதிக்கவோ, தடைசெய்யவோ, ஹோட்டல்காரர்களுக்குத் தான் உரிமையிருப்பதாயும், தீண்டாதார், ஒரு பொது மனிதன் என்ற ஹோதாவில் அங்கு பிரவேசிக்க மேற்படி சட்டம் அநுமதி கொடுக்கவில்லையென்றும் பிரவேசிப்பவரைத் தடுத்தால் மேற்படி சட்டத்தின்படி ஹோட்டல்காரர்மீது நடவடிக்கை எடுக்க இடமில்லையென்றும், ஹோட்டல் லைஸென்ஸுகளில் ஸுகாதாராதி கண்டிஷன்களைப்பற்றி மட்டுமே நிபந்தனை விதிக்கப்படுகிறதேயல்லது, உள்ளே பிரவேசிப்பவர் விஷயமாக எவ்வித நிபந்தனையும் கிடையாதென்றும் கவர்ன்மெண்டார் விவரமாக அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆகவே ஹோட்டல் போன்றவை பொது ஸ்தலங்களல்லவென்றும், தாழ்ந்தவனாயிருந்தாலும், உயர்ந்தவனாயிருந்தாலும், ஒருவனை உள்ளே அநுமதிப்பது ஹோட்டல் சொந்தக்காரனுடைய இஷ்டத்தைப் பொறுத்த விஷயமென்றும் தீர்மானிக்கப்பட்டதாக ஏற்படுகிறது.

இக்காலத்தில் ஜாதி தர்மங்கள் அழிவதற்கு ஹோட்டல்கள் ஒரு முக்கிய ஸாதனங்களாயிருப்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

ஆசாரத்தையும், ஸுகாதாரத்தையும் உத்தேசித்து கூடியவரையில் ஹோட்டல்களை ஒதுக்கிவிட வேண்டியதே ஜனங்களின் கடமையாயிருக்கிறது. ஆனால் இது இப்போது திடீரென நடக்கக்கூடிய விஷயமல்ல. ஆகையால் அவைகளை உபயோகப்படுத்துவோர்களுடைய ஆசார உரிமையில் பிரவேசித்து வீண்கலகம் உண்டாக்குவதை எவரும் எதிர்க்க வேண்டியதே. சென்னை மாகாணத்திலுள்ள ஒரு கக்ஷியார் முனிஸிபாலிடிகள், ஜில்லாபோர்டுகள் முதலியவைகளில் நுழைந்து இவ்விஷயமாக நியாயமற்ற கார்யங்கள் நடத்தி வருவதைப்பார்க்கிறோம். அநேக முனிஸிபாலிடிகளில் ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பதில் தீண்டாதார் பிரவேசத்தை ஒரு நிபந்தனையாக விதிக்கவேண்டுமென்று வற்புறுத்தியது பலரும் அறிந்த விஷயம். முனிஸிபாலிடிகளில் பிரஜைகளின், ஜீவ நாடியான ஸுகாதாரம், வரிப்பளுக்குறைவு, முதலியவைகளைப்பற்றியோ, வரவுசெலவு திட்டம் போன்ற நிர்வாஹ முறைகளைப் பற்றியோ மெம்பர்கள் கவலை கொள்ளாமல் தீண்டாமை விலக்கு முதலிய சச்சரவுகளை வளர்ப்பதே வேலையாகக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் கக்ஷி வேலைத்திட்டத்தை நிறைவேற்றவே அங்கு அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்களேயல்லது நியாயத்தைக் காப்பாற்ற அல்லவென்பது வெளியாகிறது இப்போது அவர்கள் எம். ஸி. ராஜாவின் சட்டப்படி ஹோட்டல் பிரவேசக் கலஹத்தைக் கிளப்பி விட முயற்சிப்பதாகத் தெரிகிறது.

எந்த தேசத்திலும, சட்டமென்பது, அவரவர்கள் நீண்டகாலமாக அநுபவித்து வரும் பாத்யங்களுக்கும், உரிமைகளுக்கும், பங்கம் ஏற்படாமல் காப்பதற்காகவே செய்யப்படுவது ராஜ நீதிக்கு ஏற்றது. ஆனால் நமது காங்கிரஸ் ஆக்ஷியில் இது தலைகீழாக இருக்கிறது. பிறருடைய பாத்யங்களையும் உரிமைகளையும் அழிப்பதற்காகவே சட்டங்களை அவர்கள் உபயோகப் படுத்துவது வழக்கமாயிருக்கிறது. அதற்கு சட்டமென்ற பெயரும் தோரணையும் மேல் பூச்சாக கொடுக்கப்பட்டு விவஸ்தையை அழிப்பதிலேயே பிடிவாதம் கொள்ளப்படுகிறது. ஜனங்களுடைய ஸாதக, பாதகங்களை கவனித்துச் சட்டமியற்ற முற்படுகிறவர், சிறந்த விவேகிகளாயும், சாந்தி பொறுப்பு பக்ஷபாதமின்மை போன்ற உத்தமகுணங்கள் பொருந்தியவர்களாயுமிருக்கவேண்டும். இப்போது விஷமமான சட்டங்களை இயற்ற ஜவாப்தாரிகளாயிருப்பவர்களுக்கு மேற்கண்ட குணங்கள் எவ்வளவு உண்டென்பதை நாம் விவரிக்கத் தேவையில்லை.

இவர்கள் பிரஜைகளின் ஸ்வதந்திரத்திற்காகப் போராடுவதாகப் பாசாங்கு செய்கிறார்கள் இந்தப் பேச்சு, அவர்களுடைய செய்கைக்கு முரண்பட்டதாயிருப்பதையே பார்க்கிறோம். ஸ்வதந்திரத்தை நாசமாக்குவதே அவர்களுடைய கார்யமாயிருக்கிறது. புதிதாகச் சிலரைக் கிளப்பிவிட்டு, அவர்களுக்கு ஏதோ நன்மைசெய்வதாக ஏமாற்றி தங்கள் கக்ஷி நலத்தை விருத்திசெய்து கொள்வதும் இவர்களுடைய நோக்கமாயிருக்கிறது.

இதன்மூலம் அவர்கள் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாகப் பிறர் அநுபவித்து வரும் நியாயமான ஸ்வதந்திரத்தை நாசமாக்கிவிடுகிறார்கள். இதுதான் காங்கிரஸ்வாதிகளின் ஸ்வதந்திரப் பேச்சின் விஷமப் போக்காகும்.

நல்லவேளையாக இப்போதுள்ளஸர்க்கார் மிகுந்த ஜாக்ரதையுடன் எம். ஸி. ராஜா சட்டத்திற்கு விளக்கம் வெளியிட்டு வீண் கலஹம் விருத்தியாகாமல் செய்துவிட்டார்கள்.

பம்பாயில் ஹோட்டல்காரர்களை நிர்ப்பந்திக்கும் சட்டமொன்றை காந்தி சிஷ்யர்கள் செய்தும் அங்கு ஹோட்டல்காரர்கள் அதற்கு உள்பட மறுத்துவிட்டார்கள். தீண்டாதார் பிரவேசிக்கும் ஹோட்டல்களை ஜாதி ஹிந்துக்கள் பஹிஷ்கரித்துவிட்ட காரணத்தால் வியாபாரம் குறைந்து ஹோட்டல்களையே மூடிவிட நேர்ந்ததும், இது விஷயமாக கவர்னரிடம் தூதுசென்று அறிவித்த விஷயமும் பிரஸித்தமானது. நமது மாகாணத்திலும் அந்த மாதிரி நிலைமை ஏற்படுமுன் கவர்ன்மெண்டார் கவனித்து பொது ஜனங்களின் நியாயமான உரிமையை நிலைநிறுத்தியது பாராட்டத்தக்கதாகும்.

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்யஸங்க மகாநாடு

(நமது நிருபர்)

ஸ்ரீமான்கள் ஏ. ஸி. வெங்கிடசுப்ரமணிய தீக்ஷிதர், வி. நாராயண அய்யர், ராஜ பாலசுப்ரமணியஜடாவல்லபர், பண்டிட் பொன்மணிஅய்யர், இவர்களது ஊக்கத்தினாலும், முயற்சியினாலும், மற்றும் இவர்களது நண்பர்களாகிய ஆஸ்திகர்களின் ஒத்துழைப்பாலும் சென்னை மகாண வர்ணாச்ரம ஸ்வார்ஜ்யசங்கமகாநாடு சிதம்பரத்தில் சென்ற முன்வாரத்தில் வெகுசிறப்புடன் நடைபெற்றது. குறைந்த சிலவில் ஷை மகாநாடு போற்றற்குரிய முறையில் நடத்தி வைத்ததைப்பற்றி ஷை ஆர்கனைஸர்களான வெங்கட சுப்ரமணிய தீக்ஷிதர், நாராயண அய்யர், முதலானவர்களுக்கு ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் சந்தோஷச் செய்தியை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. சுமார் 120 பிரதிநிதிகள் பல பாகங்களிலிருந்தும் மகாநாட்டிற்கு விஜயம் செய்து சிறப்பித்தார்கள். பிரதிநிதிகளுக்கும், இதர விஸிட்டர்களுக்கும், இடவசதி, இலவச சாப்பாட்டு வசதி, முதலான வசதிகள் குறைவின்றி செய்து கொடுக்கப்பட்டது. இதர நகரங்களில் நடப்பது போல் ஷை சிதம்பரம் மாகாணம் மகாநாட்டில் கலவரம் ஒன்றுமே நடக்காததோடு, ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து மகாநாட்டின் நடவடிக்கைகளை உற்சாகத்துடன் கவனித்து வந்தார்கள். இம்மாதிரியான மகாநாட்டை சிதம்பரத்திற்கு அழைத்து, அதை அதிக சிறப்பாக நடத்திவைத்த பெருமை ஷை ஆர்கனைஸர்களுக்கு உரியதே என அநேகர் பேசி வருகிறார்கள்.

மகாநாட்டுத்தலைவரான திவான்பகதூர் வி. மாசிலாமணி பிள்ளை அவர்கள் ஸ்டேஷனில் குதூகலத்துடன் 27—12-39 வரவேற்கப்பட்டுமாலை போடப்பட்டார் டாக்டர் பொன்னம்பலம்பிள்ளை ஸ்ரீநாவலர் காலேஜ் மானேஜர் அவருக்கு மாலையிட்டு உபசரித்தார். மகாநாட்டுத்தலைவர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் வித்யாசாலையிலிருந்து மேளவாத்யத்துடனும், தக்கமரியாதைகளுடனும், "ஸநாதனதர்மத்திற்கு ஜே!" என்ற கோஷங்களுக்கு இடையே, மகாநாட்டுப்பந்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார். பல முக்யமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

பொருள்காக்ஷி விபத்திற்கு அனுதாபம்

துருக்கிக்கு உதவி செய்ய வேண்டுகோள்

அகிலஇந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் மதுரைக் கிளையினுடைய ஆதரவில் 3உயன்று ஸநாதனதர்ம வித்யாலயத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் கே. எம். பாலஸுப்பிரமண்ய அய்யர் அவர்கள் தலைமை வகித்தார்.

துருக்கியிலுள்ள பிரஜைகளுக்கு பூகம்பத்தினாலும், வெள்ளத்தினாலும் புயல் காற்றினாலும் ஏற்பட்ட ஏராளமான உயிர் சேதத்திற்கும், பொருள் சேதம் முதலிய வற்றுக்கும் அனுதாபப்படுவதாயும் துருக்கி உதவிபண்டுக்கு யாவரும் பணஉதவி செய்யக்கோருவதாயும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

மறுநாள் ஸ்ரீமான் சிவராமகிருஷ்ணசாஸ்திரிகளின் தலைமையில் நடந்த மற்றொரு கூட்டத்தில் சென்னை ஸ்வதேசி காதி பொருள்காட்சிஜில் தீ விபத்து நேர்ந்ததற்கு வருத்தம் தெரிவித்தும் அதில் நஷ்டமடைந்தவர்களிடம் அனுதாபம் காட்டுவதாயும் தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானத்தைப் பற்றி ஸ்ரீமான் ராவ்ஸாகிப் என். நடேசய்யர், என். ஆர். கிருஷ்ணஸாமி அய்யங்கார் இருவரும் பேசினார்கள்.

(ந. கி.)

வாரக்குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஹிந்து ஸபையின் மயக்கம்! தேசீய ஸபைதான் பரலோகத்தை மறந்ததெனில் ஹிந்து மஹா ஸபையும் பௌதிகப்பேய் பிடித்தாடுகிறது. தீண்டாமை விலக்கு தீர்மானம் செய்து ராணுவ கலாசாலை ஸ்தாபிக்க ஏராளமான பணத்தைச் சேர்த்தது. அதில் ஓர் பகுதியேனும் தர்மாபிவிருத்திக்கு செலவு செய்யலாகாதா?

நால்வர் தனதாயாதிகள்! தர்மம் அக்கி அரசன் சோரன் என்று பணத்திற்கு பங்காளி நால்வர். முத்தண்ணாவை அலக்ஷியம் செய்தால் மற்ற மூவரும் கோபங்கொள்கின்றனர். என்ற சுலோகத்தை ஸ்ரீ கிருஷ்ண ஜீவன்ஜி என்ற வல்லப மடாதிபதிகள், காங்கிரஸ் கண்காக்ஷிசாலை தீக்கிரையானபோது கூறினார். த்வேஷ புத்தியை விட்டு நன்கு யோசித்தால் தான் அதன் கருத்து விளங்கும். பிறராபத்தைக் கண்டு ஸந்தோஷிப்பதாக எவரும் நினைக்கலாகாது.

ஸாதுக்களின் துன்பத்தீயோ! பல பக்தர்களது மநம் தேசீய ஸபையின் ஆலயப்பிரவேச ஆவேசத்தால் நொந்து துக்காக்கியால் பற்றி எரிகிறது. அந்த தீ தான் காங்கிரஸ் மாளிகையை எரித்தது என்பது திண்ணம். இனியாகிலும் இத்தீயசெயலை விட்டு ஆக்க வேலையிலீடுபடுவரா? தார்மிகரது மநம் ஆலயத்தை விட கண்காக்ஷி எரிந்ததில் அதிகத் துன்பமடைகிறது.

நூதந மதமா? வேதாசலமென்ற அழகிய பதத்திற்குப் பாத்திரமாயிருந்து அப்படியே அழைத்துக்கொள்ளும் பாக்யமில்லாத மறைமலை அடிகள் சென்னையில் தமிழர் மதஸபை கூட்ட முயல்கிறார்? இது எத்தகையதோ பார்ப்போம்.

மஹாராஜ திலகம்! என்ற பட்டம் நேபால பூபாலனுக்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் அருள் செய்யப்பட்டது. மற்றோர் பண்டிதருக்கு தார்சநிக திலகமென்றளிக்கப்பட்டது. ஸ்ரீ குரு கருணைக்கு பாத்திரமானவர்களைக் கொண்டாடுகிறோம்!

உலக சாந்திக்கு வழி!! ஸர். ராதாகிருஷ்ணன் வேதாந்தத்தால் என்கிறார். மஹாகனம் சாஸ்த்ரி புதிய உலக ஸபையால் என்கிறார். மற்றும் பலர்பல கூறுகின்றனர் நாம் வைதிக தர்மத்தால் தான் என்றால் யாரதை ஆக்ஷேபிப்பவர்?

இன்னும் முன்னே தாவுகிறார்! தற்கால "ஆறு மாத" அரசாங்கம் பஞ்சமருக்குப் பரிந்து தேசிய ஸபையை விட ஓரடி முன்னே போய் வயசுக்கணக்கே வேண்டாம் உத்யோகத்தில் சேர என்கிறது. படிப்பே கூடவேண்டாம். ஆனால் தர்மத்தைக்கெடுக்காதிருந்தால் போதுமென்பது நமது மதம்!

என்ன செய்தேன்ன? சென்னை மேயர் ஸமயத்தில் சாதுர்யமாக துருக்கிக்கு உதவி புரிய மேயர் நிதி ஆரம்பித்தார். எவ்வளவு செய்தாலும் நன்றியும் நேசமுமில்லாதவர் கிடக்கட்டும். சென்னை ராஜீய உலகில் இந்த ஸமயோசித வேலைக்கு ஆமோதநமாவது உண்டோ? அத்ருஷ்டம் வேண்டும்!!

நல்ல கைங்கர்யம்! விருத்திக்கு அறிகுறியாக மதுரை தார்மிகரில் பிளவு தோன்ற, அதையும் நீண்டநாளாய் தொடர்ந்து வரும் தெங்கலை வடகலை சண்டையையுமகற்றி ஸமாதாநம் செய்ய ஸ்ரீமான் ஸி. வி. வெங்கட்டரமண அய்யங்கார் முயற்சிக்கிறார். அது சுலபமாகுக. அவரும் வாழி!

பாலக்காட்டு ஸதிர்கள் கண்டனம். ஆலயப்ரவேச அநீதி தோன்றியபின் வைதிக ஸ்திரீகளும் ஆபத்தர்மமென்று ஸதாசாரத்தைச்சிறிது தளர்த்தி ஆங்காங்கு கண்டநக் கூட்டம் போடுகின்றனர். சென்ற வாரம் பாலக்காட்டில் பெண்கள் பெரும் கூட்டம் கூடி அதைக்கண்டித்தனர்.

காந்திஜி கலங்குகிறார். வங்காளம் மட்டுமல்ல. மற்றும் பல மாகாணங்களும் அடங்காப்பிடாரிகளாகி விட்டன. யத்தி பத்தியாக அவர் பத்திரிகையில் எழுதி கதறுவதுடன் அடிக்கடி ஆண்டவன் பெயரெனும் மாயவலையை வீசுகிறார். பாவம்.

ராமேஸ்வரம் யூனியன் எலெக்ஷனில் ஸனாதநிகளின் வெற்றி

இவ்வூர் ஆஸ்திகமகாஜனங்கள் சிறந்த ஊக்கத்துடன் ஆலயத்தை ஆலயப்ரவேச அக்ரமசட்டத்தில் நின்றும் பாதுகாக்கவும் ஸனாதனதர்ம்மத்தை நிலைநிறுத்தவும் விசேஷ உத்ஸாஹத்துடன் பல பொதுக்கூட்டம் நடத்தியதின் காரணமாக பாமரமக்கள் காங்கிரஸ்ஸின் மாயவார்த்தைக்கு உள்படாமல் விழித்துக்கொண்டார்கள் என்பது சமீபத்தில் நடந்த பஞ்சாயத்போர்டு எலக்ஷன் மூலம் நன்கு வெளியாயிற்று. இவ்வூர் யூனியன் பஞ்சாயத் போர்டு எலக்ஷன் 18—12—39ல் நடைபெற்றது. இவ்வூரில் உள்ள 12வார்டுகளில் ஒன்றாவது வார்டிலும் 9வது வார்டிலும் காங்கிரஸ்காரர்கள் பலவழியிலும் சூழ்ச்சிசெய்தும் தலைகாட்ட முடியாமல் வேறு எவ்விதப்போட்டியுமன்றி ஸனாதனிகளின் ஏகோபித்த தீர்மானத்தின் பேரில் எலக்ஷனில்லாமலேயே முறையே ஸ்ரீ A. V. நாராயண கனபாடிகளவர்களும் பீமாசங்கரபட்டரவர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். மற்றுமுள்ள 10 வார்டுகளிலும் காங்கிரஸ்காரர்கள் பலத்த முயற்சிசெய்தும் ஒன்றும் பலியாமல் படுதோல்வியடைந்தார்கள். 12-வதுவார்டில் சேர்மன் பதவியைவகித்து வந்த தீவ்ர காங்கிரஸ்வாதியான திரு S. V. இராமனாதனென்பவர் திரு M. R. M. S. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் முறியடிக்கப்பட்டார். 8வார்டில் ஜில்லாபோர்டு மெம்பர் திரு பாலசுப்பிரமணியம் பிரபல காங்கிரஸ்வாதி, ஸ்ரீ சேஷாத்திரி அய்யருடன் போட்டி செய்து தோல்வியுற்றார். இவ்விதம் எல்லா ஸ்தானங்களிலும் காங்கிரஸ்காரர்களை முறியடித்து ஸனாதனிகள் பூர்ண ஜயம்பெற்றது தேசமெங்கும் போற்றத்தக்கதாகும். இவைகளில் 4, 8, 12 வார்டில் ஏற்பட்ட ஸனாதனிகளின் ஜயம் சந்திர சூர்யாளுள்ளவரையிலும் குறிப்பிடத்தக்கதும், சரித்திரத்தில் சேர்த்துப் போற்றத்தக்கதாகுமென்பது மிகையாகாது.

ஸனாதனிகளின் பரிபூர்ண வெற்றிக்கு தெருத்தெருவாய் ஸனாதனிகள் கூட்டம் போட்டு காங்கிரஸின் ஊழல்களையும் அதிக்ரமங்களையும் எடுத்துக் கூறி பாமரர்களும் தெரிந்துகொள்ளுமாறு தர்மப்ரசாரம் செய்ததே மூலகாரணமென்பது குறிப்பிடத்தக்கது.

(நமது நிருபர்)

ஆர்யதர்மம் நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

நமது பத்திரிகையில் ஏற்கனவே, லலிதாஸஹஸ்ர நாமம், மூகபஞ்சசதி போன்ற சிறந்த புஸ்தகங்களின் மொழி பெயர்ப்பு வெளிவந்தது போல், இன்னும் சில உயர்ந்த கிரந்தங்களை மொழி பெயர்த்து வெளியிட நிச்சயித்திருக்கிறோம். மூகபஞ்ச சதி மந்தஸ்மித சதகம் பூர்த்தியாக வெளியிட்டவுடன் இந்த புதிய கிரந்த மொழி பெயர்ப்பு ஆரம்பிக்கப்படும். இவ் வருஷத்தில் மொழி பெயர்பித்து பிரசுரிக்க உத்தேசித்துள்ள புஸ்தகங்களின் பெயரை கூடிய சீக்கிரம் வெளியிடுவோம். ஆர்ய தர்மம் சந்தாதார்களாகிய அபிமானிகள் இந்த லாபத்தை அடையவேண்டி, பத்திரிகையை தொடர்ந்து ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

மானேஜர்

ஆர்யதர்மத்திற்கு நன்கொடை

ஆர்யதர்மம் பத்திரிகையின் அபிவிருத்தியின் பொருட்டு பாண்டிச்சேரி கஸ்டம்ஸ் ஸப்-இன்ஸ்பெக்டரான ஸ்ரீமான் வி. ராமஸாமி அய்யர் என்ற கனவான் 5 ரூ உதவி செய்திருப்பதை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

மானேஜர்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— டாக்டர் T. S. சவுரிராஜன் L D, SC, ஆயிகுளம்ரோட் கும்பகோணம்

வெளியூர்செய்திகள்.

நீடாமங்கலம்: -

ஸ்ரீ. என். எஸ். விச்வநாதய்யருடைய முயற்சியால், ஸ்வாமிமலை புராணகேஸரீ ஸ்ரீசுப்பராய சாஸ்திரிகளின் குமாரர் ஸ்ரீசாம்பமூர்த்தி பாகவதர்களால் ஸநாதன தர்மத்தின் க்ஷேமத்திற்காக ஸ்ரீதேவிபாகவத புராணம் உபன்யஸிக்கப்பட்டது.

சென்னை: -

ஸ்ரீகந்தஸாமிக் கோவிலின் பிரம்மோத்ஸவம் தைமீ 1உமுதல் ஆரம்பிக்கப்பட்டு 19உ வரையில் விசேஷ வைபவத்துடன் வழக்கம் போல் நடைபெறும் 10உமுதல் ஸ்ரீசிவசுந்திரமூர்த்தி ஓதுவாரின் தேவார கோஷ்டியும் நடக்கும்.

ராமேச்வரம்: -

சாஸ்திரபாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ. கே. என். சுப்ரமண்ய சாஸ்திரிகளால் ஸ்ரீ. தேவாலயத்தில் நடத்தப்பட்டு வரும் ஸ்காந்த புராணபிரவசனத்தில் பட்டாபிஷேக வைபவம் வெகுவிமர்சையாக நடைபெற்றது. யுத்தத்தில் மன்னருக்கு வெற்றியேற்படவேண்டி பெரிய ஊர்வலம் நடைபெற்றது.

புதுக்கோட்டை: -

ஸ்ரீவைதிகவர்த்தினீ ஸபையின் ஆதரவில் நடந்துவந்த திரிவேத பாராயணம் 45நாள் நடந்து 29—12—39ல் பூர்த்தியாகியது. உதவி அட்மினிஸ்டேட்டர் ராவ்பகதூர் கிருஷ்ணமாசாரியர் முதலியவர்கள் அச்சமயம் விஜயமாகியிருந்தார்கள். பிராம்மண ஸந்தர்ப்பணம் விசேஷமாக நடந்தது, ஸ்ரீபஞ்சாபகேச சாஸ்திரிகளும் ஸ்ரீகல்யாணசுந்தர கனபாடிகளும் உபன்யாஸம் செய்தார்கள்.

நாகூர்

நாகூர் பிராமண சங்கத்தில் ஸ்ரீராதாகல்யாண மஹோத்ஸவம் 27—12—39உ ஆரம்பிக்கப்பட்டு 28—12—39உ கல்யாண வைபவமும் 30—12—39உ ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமி உத்ஸவத்துடன் மிக்க சிறப்பாக நிறை வேறியது. உத்ஸவத்திற்கு திருவாரூர் ஸ்ரீ வி. சந்தான பாகவதர்களவர்கள் வந்திருந்து நடத்தி வைத்தார்கள். ஹரிகதா காலக்ஷேபமும் நடந்தது.

1—1—40 திருவாரூர் ஸ்ரீகே. ஆர். ராமேஸ்வரய்யர் அவர்கள் வழக்கம் போல்நடத்திவரும் ஸ்ரீ ராதாகல்யாண மகோத்ஸவம் மிக்க சிறப்பான முறையில் நடந்தது. பாகவத கோஷ்டிகள் ஏராளமாக வந்து குமிந்திருந்தனர். அன்று பகல் சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் விசேஷமான பிராமண சந்தர்ப்பணம் நடந்தது. இரவு ஹரிகதா காலக்ஷேபமும் கச்சேரியும் நடந்தன. பிரும்மஸ்ரீ அய்யர் அவர்கள் பக்தி சிரத்தை குறிப்பிடத்தக்கது.

நாகூர் மேல அக்கிரஹாரம் பிரும்மஸ்ரீ V. சாமிநாதய்யர் அவர்கள் தான் வழக்கமாக நடத்திவரும் ஸ்ரீ ராதகல்யாண மகோத்ஸவத்தை 7—1—40உ மிக்க விமரிசையாக பூர்த்தி செய்தார்கள்.

முனிசிபல் ஸ்கூல் டீச்சர் பிரும்மஸ்ரீ P. இராமச்சந்திரம் அவர்களால் நடத்தப்பட்டு வரும் ஸ்ரீ ராதகல்யாண மகோத்ஸவம் 7—1—40உ ஷெடியார் கிராமத்தில் மிக்க விமரிசையாக நடைபெற்றது. அதுசமயம் பிரும்மஸ்ரீ ரெங்கசாமி அய்யர் அவர்கள் Retired Deputy Inspector of School, திருவாரூர், கீத கோவிந்தத்தின் மகிமையைப்பற்றி சுமார் ¼ மணி நேரம் அரிய உபன்யாஸம் செய்தார்கள். (க. நி.)

வர்ணாஸ்ரம ஸங்க ஸ்தாபனம் செங்கற்பட்டு

17—12—39 ல் செங்கற்பட்டு ஜில்லா ஹிந்து மத்யக்க கமிட்டியின் மீட்டிங் நடைபெற்றது. சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள்.

இது வரையில் வரவு சிலவு கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டன,

1940ௌ ஜனவரிமீ கடைசிக்குள் இந்த கமிட்டி வருஷ பூர்த்தி நடத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இன்று முதல் இந்த கமிட்டியின் பெயரை மாற்றி, "செங்கற்பட்டு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜிய சங்கம்" என வழங்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

மதுரையில் ஸ்ரீ என். நடேசய்யர் தலைமையில் நடைபெறும். ஆலயப்ரவேச எதிர்ப்பு ஸத்யாக்ரம் முதலியவைகளை மனப்பூர்வமாய் ஆதரிக்கிறது.

இந்த தீர்மானங்கள் ஸங்கத்தின் உதவி கார்யதரிசி ஸ்ரீ பி. என. நாராயண சாஸ்திரியால், பிரேரேபிக்கப்பட்டு ஸபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

விழுப்புரம்

விழுப்புறத்தில் நடைபெறப்போவதாக எற்கனவே அறிவிக்கப்பட்டபடி சென்னை மாகாண தெய்வ நெறிக் கழக மகாநாடு 30—12—39உயோடு முடிவு பெற்றது. டிஸம்பர் 27, 28, தேதிகளில் சென்னை அட்வகேட் தர்மரக்ஷாமணி கே. பாலசுப்ரமண்ய அய்யரவர்கள் 3நாள் உபன்யாஸித்தார்கள். திருபுகழ்மணி டி, எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் எல்லோரும் பக்தியால் பரவசமடையுமாறு, திருப்புகழ் பஜனை செய்தார்கள். வடகுடி எஸ். நாராயண தீக்ஷிதர் அவர்கள்; டிஸம்பர் 30, 31உ இரண்டு நாட்களிலும் முறையே குசேலோபாக்யானம், ஸீதா கல்யாணம் ரொம்ப அழகாய், உபன்யஸித்தார்கள். டிஸம்பர் 24உ முதல் 30உ வரையில் வைதிக தர்ம ஸம்ரக்ஷக ப்ரவசனதுரீண ஸ்ரீ சேங்காலிபுரம், அனந்தராம தீக்ஷிதர், அவர்கள் ஸ்ரீஸ்காந்த புராண உபன்யாஸம் செய்தார்கள். செங்கற்பட்டு நியமாத்யயன வேத பாடசாலை வித்யார்த்திகள் கனபாடிகள், முதலியவர்களோடு சென்று விழுப்புறத்தில் உள்ளவர்களுக்கு காட்டி அவர்கள் மூலம் வேதம், ஆசாரம் நியமம் முதலியவைகளை ப்ரத்யக்ஷமாக காண்பித்து, அங்கும் ஒரு பாடசாலை நடக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ந.நி.

சென்னை

"ஸ்ரீ வித்தியோல்லாஸினீ ஸபா

சென்னை நாராயணமுதலி வீதிஸம்ஸ்கிருத ஹைஸ்கூல் மண்டபத்தில் மேற்கண்ட ஸபையின் கூட்டமொன்று 7-1-39 மாலை நடைபெற்றது. காஞ்சீ உபயவேதாந்த வித்வான் ப்ர. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி தலைமை வகித்தார். பல ஸம்ஸ்கிருதாபிமானிகளும் பிரமுகர்களும் குழுமியிருந்தனர். அவ்வமயம் டி. எஸ். இராஜகோபாலன் என்னும் மாணவன் "தற்போதைய உலக நிலைமை" என்பது பற்றி வடமொழியில் பேசினான். பின் பல மாணவர்களும் பண்டிதர்களும் பேசினார்கள். முடிவில் தலைவர்கள் மேற்குறித்த விஷயத்தை நன்கு விளக்கினார்.

இப்போதைய உலக நிலைமை ஒரு விதத்தில் நமக்கு பெரிய வருத்தத்தையளிப்பதாக விருந்தாலும் ஒருவிதத்தில் அஃது நமக்கு ஆறுதலையளிப்பதால் அதைப் புகழ்வதுமொக்கும். முன்பு வர்ணாச்சிரம தர்மங்கள் அதனதன் முறைப்படி நடைபெற்றன. அது போல் தற்போது நடைபெறாமல் தர்மங்கள் முறைபிறழ்ந்து காணப்படுவதால் வருத்த முண்டாகின்றது.கொண்டாடப்படுவது எவ்விதமெனில் முன்பு போல் இல்லாமல் தற்போது சாஸ்திரக் கிரந்தங்கள் மலிவாகவும் மிகுதியாகவும் கிடைக்கின்றன. தற்போது பண்டிதர்கள் அதிகமாகவே காணப்படுகிறார்கள். ஆங்காங்கு தர்ம ஸம்ஸ்தாதாபனங்களும் வேதசாஸ்திர பாடசாலைகளும் ஆஸ்திகர்களான தனிகர்களால் நிறுவப்படுகின்றன. இதுபோன்ற காரணங்களால் தற்போதய நிலைமை ஒருவிதத்தில் மேன்மையுடையதாகவே கூறவேண்டியிருக்கிறது என்று

எல்லார் தமக்குமின்பம் பயக்குமாறு வடமொழியில் எளிய நடையில் தெளிய விரிந்துரைத்தார். முடிவில் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

(ந. நி.)

Constituent Assembly.

The latest stunt which has been devised to stave off a struggle and which may in time prove to be the greatest fraud perpetrated on the Indian people by their own leaders,is the proposal of a Constituent Assembly under the aegis of an Imperialist Government. *Subhas Chandra Bose.*

Failure of Gandhian Tactics.

But with taint of violence in his heart, even a Mahatma could not persuade his own erratic son to the path of righteousness. Indians do not believe in gospel of this sort of non-violence. Hence they are, according to Mahatmaji, unfit for offering Civil Disobedience

* * *

Government is not going to interfere with our spinning, or even with our pious efforts to open temple doors for the Harijans or close liquor doors against the poor, The fate of Civil Disobedience is thus safely sealed.

* * *

What are then the Indian masses who are thirsting for the independence of their country to do? Should they sit quiet with folded hands, till the spinning wheel works out the millenium which is to follow Mahatmaji's constructive programme?

* * *

But Indians, as a nation, have never believed in the gospel of non-violence in the sense Gandhiji wanted them to do. Even some of his best followers have adopted non-violence as a policy, as a means, not as an end as Gandhiji's religion requires.

ஃ ஃ ஃ ஃ

Religious fanaticism and mystic superstition have their own use in certain specified spheres, but in politics we should deal only with realities.

Sardul Singh Caveshar in 'Forward Bloc.'

ஸ்ரீமஹாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

ஸ்ரீ பகவத்கீதை

முதல் அத்யாயம் ஆராய்ச்சி

(எம். ராமராவ், பி. ஏ. குடந்தை)

கீதையில் அர்ஜுன விஷாத யோகம் என்ற முதல் அத்தியாயத்தில் இருவருக்கு விஷாதம்(துக்கம், கலக்கம்)வெளியாகிறது. முதலில் துர்யோதனனுக்கும் பிறகு அர்ஜுனனுக்கும். உபக்ரமத்துக்கு பராக்கிரமம் என்றால் துரியோதன விஷாத யோகம் எனவும், உபஸம்ஹாரத்துக்கு விஜயம் என்றால் அர்ஜுன விஷாத யோகம் எனவும் வேண்டும். மதுசூதனர், சங்கரானந்தர், நீலகண்டர் முதலியோர் துரியேதனனுக்கு விஷாதமில்லை என்கிறார்கள். ஸ்ரீதரர் வேதாந்த தேசிகாசாரியார், ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகள் முதலியோர் துரியோதனனுக்கு விஷாதமுண்டு என்கிறார்கள். ஆகவே அதைப் பற்றி நாம் ஆராயவேண்டும்.

'திருஷ்ட்வாது பாண்டவானீகம்' என்ற சுலோகத்திலுள்ள 'து' என்பதின் ஸ்வாரஸ்யத்தைக்கவனிக்கவேண்டும். அதற்கு 'ஏவ' என்று அர்த்தம். 'த்ருஷ்ட்வைவ' துரியோதனன் பாண்டவ ஸேனையைப்பார்த்த மாத்திரத்திலே கலக்கமுற்று ஆசாரியனை அணுகினான். 'பாண்டவானீகமேவ' பாண்டவகளின் சேனைத்தலைவர்களையோ உதவி செய்ய வந்தவர்களின் ஸேனையையோ பார்க்காமல் பாண்டவ சேனை ஒன்றையே பார்த்துக் கலங்கினான். 'வ்யூடேமேவ' யுத்தம் ஆரம்பமாகவில்லை. சேனை அணிவகுக்கப்பட்டுநிற்கிறது. இதைப்பார்த்தே அவன் கலங்கினான். 'துர்யோதன ஏவ' வேறு சாதாரண போர் வீரன் கலங்கவில்லை. துரியோதனனே கலங்கினான். 'ஆசார்யமேவ' கலக்கத்தில் அரசனான தான் துரோணரைத் தன்னிடம் வரவழைப்பதா, தான் அவரிடம் போவதா என்று அறியாமல் அவரையே அணுகினான். 'உபஸங்கம்ய ஏவ' அணுகுவோமா வேண்டாமா என்று தயங்கித் தயங்கி கடைசியில் அணுகி விட்டான். 'ராஜைவ' ராஜ்யத்தில் ஏற்படும் யுத்தத்தின் பாப புண்யத்தைத்தலையில் போட்டுக்கொள்பவன் அரசன் தான், வீரர்கள் அவன் ஏவலாளிகள் என்ற முறைமையில் அரசனே கலங்கினான். 'வசனமேவ' அவன் வெறும் வார்த்தை பேசினானே தவிர காரியத்தில் ஒன்றும் செய்ய இயலவில்லை. 'அப்ரவீத் ஏவ' சொல்வோமா வேண்டாமா என்று தயங்கிக்கடைசியில் சொல்லியே விட்டான் இதனால் துரியோதனனின் விஷாதம் வெளியாகிறது.

துர்யோதனன் துரோணரிடம் சொல்கையில் 'பாண்டுபுத்ராணாம் மஹதீம் சமூம்' 7 அக்ஷௌஹிணீயாயிருந்தாலும் பாண்டவர்களின் மிகப் பெரிய சேனையைப் பாரும் என்கிறான். பீஷ்மரும், துரோணரும் பாண்டவ பக்ஷபாதிகள் என்று அவன் நன்கு அறிவான். அவ்விருவரும் காலையில் எழுந்ததும் தினந்தோறும் பாண்டவர்களுக்கு ஜயம் உண்டாகட்டும் என்று சொல்வார்கள் அதனால் தனக்கு ஜயம் உண்டாகாது.

ஆகவே அவர்களுக்கு ரோஷத்தை உண்டுபண்ணி நன்றாக யுத்தம்புரிய செய்ய வேண்டும் என்று நினைத்து 'பாண்டுபுத்ராணாம் ஆசார்ய' பாண்டவர்களுக்கு ஆசாரியனான துரோணரே என்றும் கூறுகிறான்.

பாண்டவ சைனியத்திலுள்ள வீரர்களைக் குறிப்பிடும்போது 17 பேர்களையும் தன் சைனியத்தில் 7 பேர்களையும் குறிப்பிட்டு தன் கட்சியிலுள்ள மற்ற வீரர்கள் 'த்யக்த ஜீவிதா:' உயிரிழந்தவர்கள் என்று அமங்களமாகவும் சொல்கிறான். இதனால் தன் கக்ஷிக்கு மரணம் ஏற்படுமே ஒழிய ஜயம் ஏற்படாது என்று கலங்குகிறான் என்று அறியலாம்.

10 வது சுலோகத்தில் பீஷ்மரால் ரக்ஷிக்கப்படும் நம் சேனை பாண்டவர்களை வெல்வதற்குப் போதுமானதல்ல. ஆனால் பீமனால் ரக்ஷிக்கப்படும் சேனை நம்மை ஜெயிக்கப் போதுமானது என்று ஸ்பஷ்டமாகக் கூறுகிறான். மதுஸூதனர் முதலியோர் இங்கு உத்தரார்த்தத்திலுள்ள 'பர்யாப்தம்' (போதுமானது) என்ற பதத்தை பூர்வார்த்தத்திலும் பூர்வார்த்தத்திலுள்ள 'அபர்யாப்தம்' போதாது என்ற பதத்தை உத்தரார்த்திலும் இணைத்து பீஷ்மரின் சேனை பாண்டவர்களை வெல்லப் போதுமானதென்றும் பீமனின் சேனை தன்னை ஜெயிக்கப் போதாது என்றும் நினைக்கிறதாகக் கூறுகிறார்கள். ஸ்ரீதரர் முதலியோர் அவ்விரு பதங்களையும் மாற்றாமல் அர்த்தம் செய்து துர்யோதனனின் கலக்கத்தை ஆதரிக்கிறார்கள். இது தான் ப்ரகரணத்துக்கு ஏற்றது.

12வது சுலோகத்தில் 'தஸ்ய ஸஞ்ஜனயன் ஹர்ஷம்' பீஷ்மர் துர்யோதனனுக்கு சந்தோஷத்தையுண்டுபண்ணிக் கொண்டு சங்கை ஊதினார் என்று இருக்கிறது. இதனால் அவர் ஊதுவதற்கு முன் துர்யோதனனுக்கு விஷாதம் உண்டு என்பது உறுதி செய்யப்படுகிறது.

இக்குரு க்ஷேத்திர யுத்தம் முக்கியமாக சுத்தமான பாகவத தர்மத்திலிருந்து என்றும் வழுவாத பீமசேனனுக்கும் அதர்மத்தின் தலைவனான துர்யோதனனுக்கும் தான் நடக்கிறது என்றும் கூறவேண்டும். துர்யோதனன் பேசும்போதெல்லாம் பீமசேனன் அவன் மனதைவிட்டு அகலவில்லை. பீமார்ஜுனஸமா: யுதி' என்று ஒரு இடத்தில் கூறுகிறான். 10வது சுலோகத்தில் தன் சேனாபதியான பீஷ்மரால் ரக்ஷிக்கப்பட்ட சேனை என்று கூறுபவன் பாண்டவ சேனையின் சேனாபதியான த்ருஷ்டத்யும்னனால் ரக்ஷிக்கப்பட்ட சேனை என்று சொல்லவேண்டியிருக்க அப்படிச் சொல்லாமல் பீமனையே நினைத்துக்கொண்டு 'பீமாபிரக்ஷிதம்' என்று கூறுகிறான், இதிலிருந்தும் ஜராஸந்தன் கீசகன் முதலிய பலிஷ்டர்களைக் கொன்றவனும் துரியோதனாதிகள் நூறு பேரையும் நான் ஒருவனே கொல்லப்போகிறேன் என்று பிரதிக்ஞை செய்தவனுமான பீமனைக் கண்டு துரியோதனன் கலங்குகிறான் என்பதை நாம் மறைக்கமுடியாது.

இவ்வாறாக இருவருக்கும் விஷாதம் உண்டு என்று ஸித்திக்கிறது. ஆயினும் துரியோதனனின் விஷாதத்துக்கும் அர்ஜுனனின் விஷாதத்துக்கும் பேதம் உண்டு. அர்ஜுனன் நராம்சன். இந்திரனுடைய அவதாரம். பாகவதம் 2ம் ஸ்கந்தத்தில் பிரம்மநாரத ஸம்வாதத்தில் கூறப்பட்டபடி பகவானின் மாயையை அறிந்த ஞானிகளில் ஒருவன். மானுஷான்னத்தைப் புசித்து வந்ததால் அவனுக்கு மோகம் ஏற்பட்டது. பயத்தினாலும் அதைரியத்தினாலும் ஏற்பட்டதல்ல. கடைசியில் அர்ஜுனனுக்குத்தான் ஜயம், என்றும் இரு கக்ஷிகளிலும் சங்குகளை ஊதும் விதத்தைக் கவனித்தால் தெரியவரும். துர்யோதனனின் கக்ஷியில் 'சங்கம் தத்மௌ' சங்கின் பெயரைக் குறிக்கவில்லை. பாண்டவர்களின் கக்ஷியிலோ 'பாஞ்ச ஜன்யம் ஹ்ருஷீகேச: தேவதத்தம் தனஞ்சய:' ஒவ்வொருவரின் சங்கத்தின் பெயரும் குறிக்கப்பட்டிருக்கிறது. 'திவ்யௌ சங்கௌ' என்று விசேஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'ப்ரதத்மது:' உபஸர்க்கத்துடன் சொல்லப்பட்டிருக்கிறது. துர்யோதனனின் கட்சியில் 'ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத்'. அந்த சங்குகளின் சப்தம் துர்யோதனாதிகளின் மனதைப் பிளந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் பாண்டவர்களுக்கு ஜயம் ஏற்படப்போகிறது என்பதும் தெளிவு.

இக்காலத்தில் நமது தர்ம க்ஷேத்திரமான பாரத வர்ஷத்தில் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் யுத்தம் நடந்து வருகிறது. 'ஸ்திரீஷு துஸ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ண ஸங்கர:' 'குல ஸ்திரீகள் கெட்டுப் போய்விட்டால் வர்ணங்களின கலப்பு உண்டாகிறது என்று அர்ஜுனன் கூறினபடியே

नृत्यन्ति गायन्ति नटन्ति कामं कन्याः कुलीनाः बत रंगभूमौ । प्रोत्साहकास्तत्र हि राष्ट्रधुर्याः तस्यानुमन्ता जरठो महात्मा ॥

குலப்பெண்கள் நாடக மேடைகளிலும், சினிமா ஸ்டுடியோக்களிலும் ஆடுகிறார்கள் பாடுகிறார்கள், நடிக்கிறார்கள். ராஜ்யத்தலைவர்களே அதனை உற்சாகப்படுத்துகிறார்கள் அதைக் கிழவரான மகாத்மா ஆமோதிக்கிறார் என்கிறார். கவி கூறுவதும் உண்மையாய் விட்டது. ஆலயப்பிரவேச இயக்கத்தாலும் மற்றும் பல உபாயங்களாலும் எல்லா விதத்தீண்டாமையை ஒழிக்கவும் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதால் வர்ணஸாங்கர்யம் தலைகாட்டுவதாயிருக்கிறது. பரம்பரையாக வந்த குலதர்மங்களும் ஜாதி தர்மங்களும் நாசமடையவே மனிதர்கள் நரகத்தில் வசிக்க வேண்டி வரும். ஆயினும் குருக்ஷேத்ர யுத்தத்தில் அதர்மத்தின் தலைவனான துரியோதனனுக்கு அபஜயமும், தர்மத்தில் ஈடுபட்ட பாண்டவர்களுக்கு ஜயமும் ஏற்பட்டது போலவே இங்கு அதர்மத்திற்கு அபஜயமும், ஸனாதன தர்மத்திற்கு ஜயமும் ஏற்படுவது திண்ணம்

இது 22—12—38 கீதாதினக் கொண்டாட்டத்தில் செய்யப்பட்ட உபன்யாஸச் சுருக்கமாகும்.

திவான்பகதூர்

V. K. ராமானுஜாசாயார் அவர்கள் எழுதியது.

திருவாய்மொழி (3வால்யூம்)	7	8	0
கீதார்த்தசங்கிரப் பாட்டுகள்	0	6	0
ஸ்ரீமத்கீதாபாஷ்யம் (3வால்யூம்)	3	0	0
யதீந்த்ரமத தீபிகை	4	0	0
ராமாயணசாரம் பைண்ட்	1	8	0
ஷை ராப்பர்	1	4	0
சித்திர ராமாயணம்(பூஜையில் இருக்கக்கூடியது	1	0	0
ராமாயணம், ராப்பர், சித்திர ராமாயணம்,இரண்டும்சேர்ந்து	2	0	0

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக் கூடம், லிமிடெட், கும்பகோணம்.

திருவாங்கூர் பாங்கு கேஸ்
நிர்வாஹிகளுக்கு கடுங்காவல் தண்டனை

திருவாங்கூர் பாங்கியின் நிர்வாஹிகளாயிருந்து கணக்கு மோசம் செய்ததாக நடந்த கேஸில் மானேஜிங் டைரக்டர் முதலானவர்களுக்கு 8 வருஷம் முதலான பல வகையான தண்டனைகள் விதிக்கப்பட்டன அப்ருவரான ஸ்ரீ ராமானுஜம் விடுதலை செய்யப்பட்டார். இது ஸெஷன்ஸ் கோர்ட் தீர்ப்பு. இதன்மேல் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்படலாம்.

மார்கழி சுக்லபஞ்சமிதிதி சிராத்தம்

எப்போது செய்வது?

இவ்வருஷம் இந்த மார்கழி மாஸத்தில் சுக்ல பஞ்சமி திதி கிடையாது. இந்த திதியில் செய்ய வேண்டிய சிராத்தத்தை எப்போது செய்வது என்பதைப் பற்றி ஆர்ய தர்மம் பத்திரிகைக்குப் பலர் எழுதிக்கேட்டிருக்கிறார்கள்.

ஒரு மாஸத்தில் ஒருசிரார்த்த திதி இல்லாமல் போய்விட்டால், சாந்திரமான ரீதியை அநுஸரித்து முன்மாஸத்திய திதியில் சிரார்த்தம் செய்ய வேண்டுமென்று

वृश्चिकादि त्रिमासेषु मृताहो न भवेत् यदि ।
पूर्वस्मिन् मासि कर्तव्यम् ॥—

என்பது போன்ற வசனங்களைக்கொண்டு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்து இவ்வருஷ மார்கழி சுக்ல பஞ்சமி திதி ச்ரார்த்தத்தை கார்த்திகை மாஸ திதியில் செய்யவேண்டியது நியாயமாயிருக்கும்.

ஆனல் தைமீ 1உ யன்று பஞ்சமி திதி பூர்ணமாயிருப்பதாலும், அன்று 15½ நாழிகை வரையில் மார்கழி மாஸ ஸம்பந்தமிருப்பதாலும் அன்றைய தினமே சிரார்த்தம் செய்வது சாஸ்திரீயமாகுமென்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். அடியோடு திதி இல்லாமல்போய்விட்டால்தான் பூர்வமாஸத்திற்கு போகவேண்டும். தைமீ 1உ கிடைத்துள்ள முக்யகாலத்தை விட்டு விட்டு முன் மாஸ திதிக்கு போவது நியாயவிருத்தமென்று அவர்களுடைய நிர்ணயமாகும்.

சிராத்தத்திற்கு ஏற்ற திதி அபராண்ஹதில் வ்யாப்தியுள்ளதாயிருக்கவேண்டுமென்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை. ஆனல் இது போன்ற கதியற்ற ஸந்தர்ப்பங்களில் குதப காலத்தில் திதி ஸம்பந்தமிருந்தால் கூட அதில் சிரார்த்தம் செய்வதே நியாயம். பூர்வமாஸதிதியை கிரஹிப்பதை விட ம்ருத மாஸத்தில் கௌணமாகவாவது கிடைக்கும் திதி விசேஷமாகும். மேலும் இது விஷயமாக ஓர் வசனமும் வழங்கி வருகிறது. அதாவது:—

ऊर्ध्वं मुहूर्तात् कुतपात् संक्रांतिर्यदि दृश्यते ।
पूर्वमासि न कर्तव्यं कुर्यात्प्राक्कुतपाद्यदि ॥

இந்த வசனத்தில், "குதப முஹூர்த்தாரம்பத்திற்கு மேல் ஸங்கிரமணம் நேர்ந்தால் அப்போது பூர்வமாஸத்தில் செய்யவேண்டியதில்லையென்றும், குதபத்திற்கு முன்பு ஸங்கிரமணம்இருந்தால்தான் பூர்வமாஸத்தில் செய்ய வேணு" மென்றும் சொல்லப்படுகிறது. இது ஒரு விசேஷ வசனம். வ்ருச்சிகாதி த்ரிமாஸேஷு,, என்று கீழ் காட்டிய வசனங்களுக்கு இந்த வசனம் அபவாதமாகத் தெரிகிறது, ஆகையால் கதியில்லாத இதுபோன்ற ஸந்தர்ப்பங்களில் திதிக்கு குதப ஸம்பந்தமிருந்தாலே அது சிராத்தார்ஹமென்று இந்த விசேஷ வசனத்தினல் ஸித்திக்கிறது.

இந்தவசனமானது தர்மசாஸ்திர நிபுணர் பலரிடையே பிரஸித்தி பெற்றது. இது அச்சிடப்படாத சில நிபந்தனங்களில் 'ஸ்மிருத்யந்தர' வசனமாக உதாஹரிக்கப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

ஆகையால் ம்ருததிதியில்லாத மாதங்களில் குதப ஸம்பந்தமுள்ள திதி கிடைத்தால்கூட அதிலேயே செய்ய வேண்டுமென்றும் பூர்வமாஸத்தில் செய்யக் கூடாதென்றும் ஏற்படுகிறது. இங்கு कुर्यात् प्राक् कुतपाद्यादि । என்ற கடைசி வாக்கியத்தில் குதபத்திற்கு முன்பு ஸங்கிரமணம் நேர்ந்தால் தான் பூர்வமாஸத்தில் செய்யவேண்டுமென்று தெளிவாகச் சொல்லப் படுவதால் குதபத்தில் அந்த மாஸதிதிகளின் ஸம்பந்தம் இருந்தால் போதுமென்று ஏற்படுகிறது. ஆகையால்

ऊर्ध्वंमुहूर्तात् ।

என்றதற்கு, குதபாரம்பாத் ஊர்த்வம் என்று அர்த்தம் செய்ய வேணும்.

"सकालः कुतपोनाम पितॄणां दत्तमक्षयं"

"ग्रहादिव्यतिरिक्तस्य प्रक्रमे कुतपः स्मृतः । "

"कुतपाद्यपराह्णान्तव्यापिराह्निक उत्तमा"

"सांवत्सरिकादेरस्तिकुतपनियमः । सचमुख्यः उपक्रमकालः । कुतपस्य मुख्यत्वं अनेकवचनविहितत्वादवगन्तव्यं ।"

"पार्वणश्राद्धस्य कुतपः प्रारंभकाल इति स्थितं"

இது முதலான வசனங்களாலும் தீக்ஷிதீய வாக்யங்களாலும் குதபமானது சிராத்தத்திற்கு முக்ய ஆரம்ப காலமாக நிர்ணயிக்கப்படுகிறது. இதிலிருந்து குதபமானது சிராத்தத்திற்கு நெருங்கிய ஸம்பந்தமுள்ள அங்கமாகிறது. ஆதலால்,

'कर्मणोयस्य यःकालः तत्कालव्यापिनीतिथिः'

என்றபடி அந்த குதபத்திலுள்ள திதியும் அகதிக ஸ்தலத்தில் சிராத்தயோக்யமாயிருக்க நியாயமுண்டு. இந்த நியாயத்தை ஆதாரமாகக்கொண்டுதான் மேற்படி வசனம் பிரவிருத்தித்திருக்கிறது. ஆதலால் அதற்கு பிரமாண்யமும் குறைவில்லை.

தைமீ 1உ யன்று அஹர்மானத்தையனுஸரித்து குதபத்தில் சாபசுக்ல பஞ்சமிதிதியிருப்பதால் அதுவே சிராத்த யோக்யமென்று சொல்லவேண்டும். குதபாதிகளை அஹர்மானத்தைக் கொண்டே கணக்கிடவேண்டுமென்றும் தீக்ஷிதீயத்தில் ஸ்பஷ்டம். ஆகையால் திருக்கணிதம் போன்ற சில பஞ்சாங்கங்களில் தைமீ 1உ யே மார்கழி சுக்லபஞ்சமிதிதி சிராத்தம் போட்டிருப்பது யுக்தமானதுதான்.

அ. கோ.

P.T. பாணீஸ் அண்கோ பிரசுரம்.

யஜுர்வேதிகளின் திரிகால ஸந்தியாவந்தனம்.	0	2	0
ருக்வேத சந்தியாவந்தனம்	0	2	6
ஸாம வேத ஸந்தியாவந்தனம்	0	2	6
புருஷ சூக்தம்	0	2	6
இந்திராக்ஷி ஸ்தோத்திரம்	0	2	0
ஆதித்யஹிருதயம்	0	2	0
ஸௌந்தர்யலஹரீ	0	2	0
சிவானந்தலஹரீ	0	2	0
யஜுர் உபாகர்மா	0	2	0
நவக்ரஹ ஸ்தோத்ரம்	0	2	6
சங்கராந்தி பூஜை	0	2	0
மார்க்கபந்து ஸ்தோத்ரம்	0	2	0
சாமளா தண்டகம்	0	1	0
பஜகோவிந்தம்	0	1	0

ஸ்ரீஜனர்தந பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
கும்பகோணம்

திப்பிராஜபுரம்

ஸ்ரீ ப்ரும்மவித்யா ஸபா :— 16—12–39 தேதி சனிக்கிழமை தினம் உள்ளூர் ப்ரும்மஸ்ரீ நாராயணச் ச்ரௌதிகள் அவர்கள் ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாத பரமாசாரியாளின் சரித்திரத்தில் உபநயனம் ஆனது வரையில் சொன்னார்கள்.

23—12—39உ சனிக்கிழமை தினம் ஆங்கரை ஸ்ரீ ரங்கஸாமி சாஸ்திரிகள் "ப்ரும்ம சூத்திரத்தில்,, தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருவதில் "ஆகாசஸ்த்-தல்லிங்காத்" என்னும் 8 வது அதிகரணத்தை வெகு அழகாக தெளிவு படுத்திச்சொன்னார்கள். பிறகு ஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்கள் "அஜாமிள உபாக்யானத்தை சுருக்கமாகவும், கம்பீரமாகவும் சொன்னார்.

30—12—39உ உள்ளூர் ப்ரும்மஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீமத் ராமயணத்தில் "அங்குளீயதனம்" என்னும் கட்டத்தை இனியசாரீர சம்பத்துடன் சொன்னார்.

21—12—39உ ஞாயிற்றுக்கிழமை தினம் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அய்யா தீக்ஷதர் அவர்கள், "மநுஷ்ய ஜன்மாவின் உயர்வு,, வேதத்தின் மஹிமை, கர்மாவின் லக்ஷ்யம், தர்ம ரக்ஷணத்தின் ஆவச்யகம், அதின் கௌரவம், சந்தியோபாஸனத்தின் அர்த்தம், அதின் மஹத்வம், இதுகளைப் பற்றி விரிவாகவும், ஸ்வானுபவத்துடனும், உருக்கமாகவும் உபன்யாசித்தார்கள்.

6—1—40உ சனிக்கிழமை ப்ரும்மஸ்ரீ ஆங்கரை ரெங்ஸாமி சாஸ்திரிகளவர்கள் "ப்ரும்ம சூத்திரத்தை"த் தொடர்ந்து 9–11 அதிகரணத்தை சாந்தோக்யத்திலிருந்து கோட்டுபாடுகளுடன் வெகு அழகாகச் சொல்லி முதல் பாகத்தை முடித்தார்கள்.

8—1—40உ இவ்வூருக்கு அடுத்தமருதாநல்லூரில் ஸ்ரீஸத்குரு ஸ்வாமிகள் மடத்தில் ராதா கல்யாண வைபவம் வெகு அழகாக நடந்தது. பிரம்பூர் ப்ரும்மஸ்ரீ சுப்பு ஸ்வாமிகள் முதலிய பாகவதோத்தமர்களும், ஆஸ்திகப்ரமுகர்களும் அநேகம் பேர்கள் கூடியிருந்தனர். அவ்வமயம் மாயவரம் ப்ரும்மஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் உபந்நியஸித்தரர். (ந.நி.)

திருச்சி ஆயுர்வேத சபை

சென்ற 31—12—39 ஞாயிற்றுக்கிழமை மாலை திருச்சி ஜில்லா ஆயுர்வேத சபாவின் அங்கத்தினர்கள் நெ. 10 சின்ன கடத்தெருவில் கூடினார்கள். அச்சமயம் ஆயுர்வேத சிரோமணி, மகாதேவ சர்மா அவர்கள் தலைமை வகித்தார். திருவானைக்காவல் பிஷக்வர ஸ்ரீ வி. இராஜகோபால சாஸ்திரிகள் "மனோதோஷம்" என்ற விஷயத்தைப்பற்றி உபந்நியசித்தார். ராஜஸ, தாமஸ குணங்களும் மேற்படி குணங்களை விருத்தி செய்யக் கூடிய ஆகார, விகாரத்தை சேவிப்பதாலும் காமம், குரோதம் முதலிய ஷட் மலங்கள் அதிகரித்து மனோ விகாரம் ஏற்படுவது என்றும், அவைகளை தீர்க்க சத்சங்கமும் நிர்மலமான இடத்தில் வாசமும், ஆத்ம விசாரணையுமே சிறந்தது என்று விரிவாய், ஆயுர்வேத சாஸ்திரத்திலிருந்து அத்தாட்சியுடன் எடுத்துக்காட்டினார். வந்திருந்த வைத்தியர்களில் சிலரே மேல் நடந்த சர்ச்சையில் கலந்து கொண்டனர். வழக்கம் போல் தாம்பூலம் வழங்கி, மாலை ஆறு மணிக்கு சபை கலைந்தது: ந. நி.

Printedby S, Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram,